අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50
+94112785818
info@moe.gov.lk
www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED 09 12 06 14

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2025.11.04

சுற்றுநிருப இலக்கம்- 34/2025

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்துப் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி / உதவி கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்துப் பிரிவேனாதிபதிகள்
அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

**<u>புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கிணங்க, பாடசாலைகளில் தரம் 6 – 13 இற்கான பாடசாலை நேரசூசி தயாரித்தல்.</u>**

புதிய கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ்' பொதுக் கல்வி முறைமையில் அறிமுகப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள், 2026 ஆம் ஆண்டு முதல் ஆரம்பப் பிரிவின் முதலாம் தரத்திற்கும், கனிஷ்ட இடைநிலைப் பிரிவின் தரம் 6 இற்கும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. அதற்கமைய, இடை நிலைத் தரங்களுக்கு (6 - 11) புதிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இல. 2006/09 மற்றும் 2006.03.07 திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டு முதல் இச்சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்கள் தரம் 6 - 13 இற்கு வலுவில் இருக்கும்.

**2.0 கனிஷ்ட இடைநிலை மற்றும் சிரேஷ்ட இடைநிலைத் தரங்களுக்கு (6 – 11) புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துதல்.**

2.1 இச் சுற்றுநிருபத்திற்கமைய, கனிஷ்ட இடைநிலைத் தரங்களுக்கு (6 – 9) அறிமுகப்படுத்தப்படும் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள், 2026 ஆம் ஆண்டில் தரம் 6 இலும், 2027 ஆம் தரம் 7 இலும், 2028 ஆம் ஆண்டில் தரம் 8 இலும், மற்றும் 2029 ஆம் ஆண்டில் தரம் 9 இலும் நடைமுறைப்படுத்தப்படும். 2026 ஆம் ஆண்டில் தரம் 6 இற்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய கலைத்திட்டத்தைக் கற்கும் மாணவர்கள் 2031 ஆம் ஆண்டில் முதல் முறையாகக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர்.

2.2 2026 ஆம் ஆண்டில் தரம் 7, 8, 9, 10 மற்றும் 11 இற்கும், 2027 ஆம் ஆண்டில் தரம் 8, 9, 10 மற்றும் 11 இற்கும், 2028 ஆம் ஆண்டில் தரம் 9 மற்றும் தரம் 11 இற்கும் பழைய கலைத்திட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்

2.3 சிரேஷ்ட இடைநிலைத் தரங்களுக்கான (10 – 11) புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள் 2028 ஆம் ஆண்டில் தரம் 10 இற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன், குறித்த புதிய பாடத்திட்டத்தைக் கற்கும் மாணவர்கள் 2029 ஆம் ஆண்டில் முதன்முறையாகக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

2.4 அவ் விடயம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை மூலம் முன்வைக்கப்படுகின்றது.

| வருடம் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|
| 2026 | NS | OS | OS | OS | OS | OS |
| 2027 | NS | NS | OS | OS | OS | OS |
| 2028 | NS | NS | NS | OS | NS | OS |
| 2029 | NS | NS | NS | NS | NS | NS |

NS – புதிய கலைத்திட்டம் OS – பழைய கலைத்திட்டம்

**3.0** பாடசாலை நேரசூசியைத் தயாரித்தல்.

3.1 இந்தச் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, 2026 ஆம் ஆண்டில் தரம் 6 இற்கு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், தரம் 7 இலிருந்து தரம் 11 வரை பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், பாடசாலை நேரசூசியைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

3.2 கனிஷ்ட இடைநிலைத் தரங்களுக்குரிய (6 – 9) புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள் 2027 ஆம் ஆண்டில் தரம் 7 இலும், 2028 ஆம் ஆண்டில் தரம் 8 இலும், 2029 ஆம் ஆண்டில் தரம் 9 இலும் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதால், ஒவ்வொரு தரத்திற்கும் உரியதாக புதிய கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் ஆண்டு முதல், இதன் பின்னர் அவ் அவ் தரங்களுக்கான நேரசூசிகளை இச்சுற்றுநிருபத்தின் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மற்றும் பாடவேளைகளுக்கு அமையத் தயாரிக்க வேண்டும்

**3.3 தரம் 6 இற்கு புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தல் (NS)**

| பாடங்கள் | ஒரு வாரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| தாய்மொழி | 3 |
| ஆங்கில மொழி | 3 |
| இரண்டாம் தேசிய மொழி | 1 |
| கணிதம் | 3 |
| விஞ்ஞானம் | 3 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 2 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 2 |
| வாழ்க்கைக்கான தொழில்நுட்பவியல் | 2 |
| புவியியல் | 1 |
| வரலாறு | 2 |
| குடியுரிமைக் கல்வி | 1 |
| சமயம் மற்றும் விழுமியக் கல்வி (பௌத்தம் / கத்தோலிக்கம் / கிறிஸ்தவம் / சைவநெறி / இஸ்லாம்) | 2 |
| அழகியல் கல்வி | 2 |
| முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு | 1 |
| விளையாட்டு, நூலகம், கழகங்கள் மற்றும் சங்கங்கள் | 2 |
| மேலதிக கற்றல் மொடியுல்கள் | 3 |
| நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் | 2 |
| மொத்தம் | **35** |

- அழகியல் பாடங்களின் கீழ் இல. 6.1.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்கும்.

விளையாட்டு, நூலகம், கழகங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்காக வாரத்திற்கு 02 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில், வாரத்திற்கு ஒரு பாடவேளை விளையாட்டிற்காகவும், மற்றைய பாடவேளை நூலகப் பயன்பாடு மற்றும் சங்கங்கள்/கழகங்களின் செயற்பாடுகளுக்காகவும் பொருத்தமானவாறு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

### 3.4 கனிஷ்ட இடைநிலைத் தரங்களுக்கு பழைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (OS)

| பாடங்கள் | **ஒரு வாரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| சமயம் (பௌத்தம் / கத்தோலிக்கம் / கிறிஸ்தவம் / சைவநெறி / இஸ்லாம்) | 2 |
| சிங்கள மொழி மற்றும் இலக்கியம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம் | 4 |
| ஆங்கிலம் | 4 |
| கணிதம் | 4 |
| விஞ்ஞானம் | 4 |
| வரலாறு | 2 |
| புவியியல் | 2 |
| குடியுரிமைக் கல்வி | 2 |
| அழகியல் பாடங்கள் | 3 |
| செயன்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன் | 2 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 2 |
| இரண்டாம் மொழியாக சிங்களம் / தமிழ் | 2 |
| நூலகப் பயன்பாடு | 1 |
| ➢ ஒதுக்கப்படாத பாடவேளைகள் | 1 |
| **மொத்தம்** | **35** |

- அழகியல் பாடங்களின் கீழ் இல. 6.1.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்கும்.

ஒதுக்கப்படாத பாடவேளையினை, செயன்முறை தொழில்நுட்பப் பாடத்திற்காகவோ அல்லது தகவல் தொழில்நுட்பப் பாடத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவோ அதிபரின் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 3.5 சிரேஷ்ட இடைநிலைத் தரங்களுக்கு (10 – 11) பழைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (OS)

| பாடங்கள் | **ஒரு வாரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| சமயம் (பௌத்தம் / கத்தோலிக்கம் / கிறிஸ்தவம் / சைவநெறி / இஸ்லாம்) | 2 |
| சிங்கள மொழி மற்றும் இலக்கியம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம் | 4 |
| கணிதம் | 5 |

| | |
|---|---|
| ஆங்கிலம் | 4 |
| வரலாறு | 3 |
| விஞ்ஞானம் | 5 |
| முதலாம் பாடத் தொகுதிக்குரிய பாடங்கள் | 3 |
| இரண்டாம் பாடத் தொகுதிக்குரிய பாடங்கள் | 3 |
| மூன்றாவது பாடத் தொகுதிக்குரிய பாடங்கள் | 3 |
| நூலகப் பயன்பாடு | 1 |
| ஒதுக்கப்படாத பாடவேளை | 2 |
| **மொத்தம்** | **35** |

ஒதுக்கப்படாத 02 பாடவேளைகளை விளையாட்டுக்காகவோ அல்லது வேறு கல்விசார் செயற்பாடுகளுக்காகவோ, சிங்களம் அல்லது ஆங்கில இலக்கிய மன்றங்கள் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காகவோ அதிபரின் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

**3.6 தரம் 12 மற்றும் தரம் 13 இற்கு பழைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (OS)**

| பாடங்கள் | ஒரு வாரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் - பாடம் I | 9 |
| ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் - பாடம் II | 9 |
| ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் - பாடம் III | 9 |
| பொது ஆங்கிலம் | 5 |
| பொது தகவல் தொழில்நுட்பம்/ செயற்றிட்டம் | 2 |
| நூலகப் பயன்பாடு | 1 |
| மொத்தம் | 35 |

3.7 புதிய கல்விச் மறுசீரமைப்பின் படி பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நேரசூசியில், மாணவர்கள் செயற்பாடுகளில் முறையாக ஈடுபடுவதற்காக 50 நிமிட பாடவேளைகள் உள்ளடக்கப்படுவதுடன், ஒரு நாளைக்கு 07 பாடவேளைகள் உள்ளடங்குமாறு தரம் 6 முதல் தரம் 13 வரையிலான அனைத்துத் தரங்களுக்கும் பாடசாலை நேரசூசியை பின்வருமாறு தயாரித்துக்கொள்ள வேண்டும்

| நேரம் | திகதி |
|---|---|
| மு.ப. 7.30 – மு.ப. 7.40 | காலைக் கூட்டம் மற்றும் சமய அனுஷ்டானங்கள் |
| மு.ப. 7.40 – மு.ப. 8.30 | முதலாம் பாடவேளை |
| **மு.ப. 8.30 – மு.ப. 8.35** | **வரவு இடாப்பில் புள்ளியிடல்** |
| மு.ப. 8.35 – மு.ப. 9.25 | இரண்டாம் பாடவேளை |
| மு.ப. 9.25 – மு.ப. 10.15 | மூன்றாம் பாடவேளை |
| **மு.ப. 10.15 – மு.ப. 10.40** | **இடைவேளை** |
| மு.ப. 10.40 – மு.ப. 11.30 | நான்காம் பாடவேளை |
| மு.ப. 11.30 – பி.ப. 12.20 | ஐந்தாம் பாடவேளை |
| பி.ப. 12.20 – பி.ப. 1.10 | ஆறாம் பாடவேளை |
| பி.ப. 1.10 – பி.ப. 2.00 | ஏழாம் பாடவேளை |

3.8 புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கு அமைய, முஸ்லிம் பாடசாலைகளுக்கான பாடசாலை நேரசூசி தயாரிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையினால் வெளியிடப்படும்

## 4.0 கனிஷ்ட இடைநிலைத் தரங்களுக்கான (தரம் 6 – 9) புதிய கலைத்திட்டம்

4.1 கனிஷ்ட இடைநிலை மட்டத்திற்கு மொடியுல் அடிப்படையிலான (Module basis) மற்றும் திறன் மட்ட அடிப்படையிலான (Credit basis) கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்தப் புதிய கலைத்திட்டம் 2026 ஆம் ஆண்டில் தரம் 6 இற்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

### 4.1.1 கட்டாயப் பாடங்கள்

அனைத்து மாணவர்களும் 14 கட்டாயப் பாடங்களைக் கற்பது அவசியமாகும் என்பதுடன். அந்தக் கட்டாயப் பாடங்கள் 14 மொடியுல்களூடாக கற்பிக்கப்படும். பாடங்களுக்கமைய , ஒரு தவணைக்கு கற்க வேண்டிய மொடியுல்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்

1. தாய்மொழி
2. ஆங்கில மொழி
3. இரண்டாம் தேசிய மொழி
4. கணிதம்
5. விஞ்ஞானம்
6. காதாரமும் உடற்கல்வியும்
7. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
8. வாழ்க்கைக்கான தொழில்நுட்பவியல்
9. புவியியல்
10. வரலாறு
11. குடியுரிமைக் கல்வி
12. சமயம் மற்றும் விழுமியக் கல்வி (பௌத்தம்/ கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம்/ சைவநெறி/ இஸ்லாம்)
13. அழகியல் கல்வி
14. முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு

### 4.1.2. மேலதிக கற்றல் மொடியுல்கள்

ஒரு பாடத் துறையினுள் மாணவர்களின் அறிவையும் திறன்களையும் மேலும் விருத்தி செய்யக்கூடிய வகையிலும், மாணவர்களின் விருப்பத்திற்கிணங்கவும் ஒரு தவணைக்கு 03 மேலதிக கற்றல் மொடியுல்களைக் கற்க வேண்டும். ஒவ்வொரு கட்டாயப் பாடத்திற்கும் மேலதிக கற்றல் மொடியுல்கள் உள்ளன. மாணவரின் விருப்பத்திற்கேற்ப ஒரு தவணைக்கு 03 மொடியுல்களைத் தெரிவு செய்யலாம்

4.1.3. நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைமாற்றுத் திறன் மொடியுல்களுள் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப ஒரு தவணைக்கு 02 மொடியுல்களைத் தெரிவு செய்யலாம்.

## 5.0 கனிஷ்ட இடைநிலைத் தரங்களுக்கான பழைய கலைத்திட்டம்

1. சமயம் (பௌத்தம் / கத்தோலிக்கம் / கிறிஸ்தவம் / சைவநெறி / இஸ்லாம்)
2. சிங்கள மொழி மற்றும் இலக்கியம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம்
3. ஆங்கிலம்
4. கணிதம்
5. விஞ்ஞானம்
6. வரலாறு
7. புவியியல்
8. குடியுரிமைக் கல்வி
9. அழகியல் பாடங்கள்
10. செயன்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள்
11. சுகாதாரமும் உடற்கல்வியும்
12. இரண்டாம் மொழியாக சிங்களம் / தமிழ்

## 6.0 சிரேஷ்ட இடைநிலைத் தரங்களுக்கான (தரம் 10 – 11 ) பழைய கலைத்திட்டம்

6.1 சிரேஷ்ட இடைநிலைத் தரங்களுக்காக நடைமுறையிலுள்ள பழைய கலைத்திட்டமானது, பிரதான பாடங்கள் மற்றும் தொகுதிப் பாடங்கள் என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. 06 பிரதான பாடங்கள் உள்ளன. தொகுதிப் பாடங்கள் 03 தொகுதிகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளதுடன், அந்த மூன்று தொகுதிகளிலும் ஒவ்வொரு தொகுதியிலும் இருந்து ஒரு பாடம் வீதம் 03 பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். இதன்படி, அனைத்து மாணவர்களும் 06 பிரதான பாடங்கள் மற்றும் 03 தொகுதிப் பாடங்கள் உட்பட மொத்தம் 09 பாடங்களைக் கற்க வேண்டும்

6.1.1 பிரதான பாடங்கள்

அனைத்து மாணவர்களும் இந்த 06 பாடங்களையும் கற்க வேண்டும்.

1. சமயம் (பௌத்தம் / கத்தோலிக்கம் / கிறிஸ்தவம் / சைவநெறி / இஸ்லாம்)
2. சிங்கள மொழி மற்றும் இலக்கியம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம்
3. கணிதம்
4. ஆங்கிலம்
5. வரலாறு
6. விஞ்ஞானம்

6.1.2 தொகுதிப் பாடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத் தொகுதிகளில் ஒரு தொகுதியில் இருந்து ஒரு பாடத்தை மாத்திரமே தெரிவு செய்ய வேண்டும்

6.1.2.1 முதலாம் பாடத் தொகுதி

1. புவியியல்
2. குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்
3. முயற்சியாண்மைக் கல்வி
4. பாரம்பரிய மொழிகள் மற்றும் நவீன மொழிகள் (பாலி / சமஸ்கிருதம் / பிரெஞ்சு / ஜேர்மன் / ஹிந்தி / ஜப்பானிய / அரபு / சீனம் / ரஷ்யன் / கொரியன்)
5. இரண்டாம் மொழியாக சிங்களம்/ தமிழ்
6. வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி

6.1.2.2 இரண்டாம் பாடத்தொகுதி

1. கீழைத்தேய சங்கீதம் (சிங்கள மொழி மூலம்)
2. கர்நாடக சங்கீதம் (தமிழ் மொழி மூலம்)
3. மேலைத்தேய சங்கீதம் (ஆங்கில மொழி மூலம்)
4. உள்நாட்டு நடனம் (சிங்கள மொழி மூலம்)
5. பரத நாட்டியம் (தமிழ் மொழி மூலம்)
6. நாடகமும் அரங்கியலும் (சிங்கள மொழி மூலம்/ தமிழ் மொழி மூலம்/ ஆங்கில மொழி மூலம்)
7. சித்திரக் கலை (சிங்கள மொழி மூலம்/ தமிழ் மொழி மூலம்)
8. இலக்கிய இரசனை (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்/ அரபு)

6.1.2.3 மூன்றாம் பாடத்தொகுதி

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
2. விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்
3. நீரியல் உயிர் வளங்கள் தொழில்நுட்பம்
4. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்
5. நுண் கலை
6. மனைப் பொருளியல்
7. இலத்திரனியல் ஆவணப்படுத்தல் மற்றும் சுருக்கெழுத்து
8. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி
9. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி

## 7.0 உயர் தர (தரம் 12- 13) பழைய பாடத்திட்டம்

தரம் 12 மற்றும் 13 இற்கு, இல. 2016/13 மற்றும் 2016.04.26 ஆம் திகதியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பாடச் சேர்க்கைகள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான பாடச் சேர்க்கைகள் ஆகிய சுற்றுநிருபங்கள் மற்றும் அதற்குரிய ஏனைய திருத்தப்பட்ட சுற்றுநிருபங்கள் அல்லது அறிவுறுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாடச் சேர்க்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், பாடங்களுக்கான குறித்த பாடவேளைகளின் எண்ணிக்கை மாத்திரம் இந்த புதிய சுற்றுநிருபத்திற்கு அமைய திருத்தப்படல் வேண்டும்

**8.0 பொது விடயங்கள்**

8.1 புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் பாடங்களைக் கற்பிக்கும் போது பாடத்திட்டம் மற்றும் மொடியுல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்கு விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும்.

8.2 இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்குரியதாக தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள மொடியுல்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டல் கையேடுகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிட்டு உரிய காலப் பகுதியினுள் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

8.3 இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய எந்தவொரு சிக்கல்கள் தொடர்பிலும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

8.4 இச் சுற்றுநிருபத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான வசனங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடினமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான வசனம் வலுவில் இருக்கும்.

நாலக கலுவெவ
செயலாளர்

பிரதிகள் -

1. அனைத்து மாகாண ஆளுநர் செயலாளர்கள்
2. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
3. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைப் பிரதானிகள்